தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## உள்ளக கணக்காய்வு அதிகாரி பதவிகளின் எண்ணிக்கை: 01

சேவைப் பிரிவு: **JM 1-1**

## பதவியின் தன்மை

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டு இடர் நிலையை அடிப்படையாகக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல், நிறுவனத்தின் பிரதான ஆபத்துக்களை இணங்கண்டு நிதி, தொழிற்பாடு, இணக்கப்பாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயலாற்றுகைக் கணக்காய்வுகளை மேற்கொண்டு கட்டுப்பாட்டு முறைமைகள், இடர் முகாமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுகைக் கட்டமைப்புக்களின் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனை மதிப்பிடுதல்.
- உள்ளக ஆளுகை முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனை மதிப்பிடுதல், உரிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், அரசாங்கக் கொள்கைகள், திறைசேரிப் பணிப்புரைகள், நிதிப் பிரமாணங்கள், கொள்முதல் வழிகாட்டல்கள் மற்றும் நிறுவனக் கொள்கைகளுடனான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தல் மற்றும் நிறுவன ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பில் சுயாதீன உறுதிப்படுத்தல் சேவையை வழங்குதல்.

- சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட பக்கச்சார்பற்ற குறிக்கோள் சார்ந்த கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரித்தல், நடைமுறைச் சார்ந்த பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல், கணக்காய்வு முடிவுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கையிடுதல், உடன்பாடு எட்டப்பட்ட திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பின்னாய்வு செய்தல் மற்றும் அதன் முன்னேற்றத்தை அறிக்கையிடுதல்.

- மோசடி ஆபத்துக்கள், உள்ளக ஆளுகைப் பலவீனங்கள், நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் மற்றும் தொழிற்பாட்டு செயற்றிறனின்மைகளை அடையாளங்கண்டு அவசியமான சந்தர்ப்பங்களில் விசேட விசாரணைகளை நடத்துதல், மற்றும் உள்ளகக் கணக்காய்வின் சுயாதீனத்தன்மை மற்றும் பக்க்ச்சார்பற்ற குறிக்கோள் தன்மையைப் பாதுகாத்து உள்ளக ஆளுகை, நிறுவன ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவத்திற்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

- கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆவணங்கள், பணிப்பத்திரங்கள் மற்றும் சாட்சியங்களைச் சரியாகவும் இரகசியமாகவும் பாதுகாத்துப் பேணுதல், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் ஏனைய ஒழுங்குறுத்தல் நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிறுவனத்தினுள் நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல், மற்றும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை உரிய தொழில்முறை நியமங்கள், சட்டங்கள் மற்றும் நிறுவனக் கொள்கைகளுக்கு அமைய மேற்கொள்ளல்.

## தகைமைகள் (கீழேயுள்ள 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீடு / பொது நிர்வாகம் / வியாபார நிர்வாகம்

அல்லது பதவிக்குரிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

2. பதவிக்குரிய விடயத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டயத் தொழில்முறை நிறுவனமொன்றின் இடைநிலைப் (Intermediate) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

## வயதெல்லை

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## சம்பள அளவுத்திட்டம்

**JM 1-1 – 2025 - ரூ. (72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970)**

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)